**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.88/2015** **தேதி.**09.03.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 09.03.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.கருணாநிதி |
| த/பெ. | திரு.நாராயணன் |
| வயது | 62/2026 |

துவக்க நேரம் 01.05 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. இந்த வழக்கை என் மனைவி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவி என்ன வழக்கு போட்டுள்ளார் என்று படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இந்த வழக்கில், எனது மனைவி அப்பா பெயரை குறிப்பிட்டுள்ளாரா, கணவர் பெயரை குறிப்பிட்டுள்ளாரா என்றால் கணவர் பெயரை குறிப்பிட்டிருப்பார் என்னிடம் காட்டப்படும், தாவாவில் எனது மனைவி, தகப்பனார் பெயரை குறிப்பிட்டுள்ளார்.

2. நான், எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எனது மாமனார் என் முன்னிலையில் உயில் ஒன்றை எழுதிவைத்தார், அதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். அந்த உயில், யாரிடம் உள்ளது என்றால் எனது மாமனாரிடம் இருந்தது, அதில் ஒரு நகல் எடுத்து என்னிடம் கொடுத்தார், அது என்னிடம் உள்ளது. அந்த உயிலின் நகலைத்தான் என் மனைவி, இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம்.

3. அந்த உயிலில், என்னென்ன சங்கதிகளை சொல்லி எனது மாமனார் எழுதியுள்ளார் என்றால் அவரது காலத்திற்கு பிறகு அவரது மகளுக்கு போய்சேரவேண்டும் என்று எழுதியிருந்தார். எனது மாமியார், எனது மனைவி அனுபவித்து வந்தார்கள். அந்த உயிலில் எனது மாமியார், எனது மனைவியும் அனுபவிக்கவேண்டும்என்று எனது மாமனார் எழுதியிருந்தாரா என்றால் ஆமாம். உயிலில் சாட்சி போட்ட நபர்கள் யார்,யார் அவர்களது விலாசம் தெரியுமா என்றால் தெரியாது.

4. நான், சொல்லும் உயில் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் கடந்த 2004 ம் ஆண்டு எழுதப்பட்டது. உயில் எழுதி 10 ஆண்டுகள் கழித்து எனது மாமனார் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். எனது மாமனார் உயிருடன் இருக்கும்பொழுதே, அந்த உயிலை மாற்றிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. எனது மாமனார் இறப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு, நானும், எனது மகளும் ஆஞ்சநேயர் கோயில் தெரு, நெ.25 ஏ என்ற வீட்டில் தனியாக குடியிருந்தோம் என்றால் இல்லை. இவ்வழக்கில், எந்தெந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வீடு, பஜாரில் உள்ள கடை ஆகியவற்றிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

6. எனது மாமனாரின் வீட்டு எண். என்னவென்றால் ஆஞ்சநேயர் கோயில் தெருவில் வீட்டு எண்.36. ஆஞ்சநேயர் கோயில் தெரு, நெ.25 ஏ என்ற வீடு ருக்மணி, கோபால் என்கிளேவ் என்ற வீடு என்றால் சரிதான். ஆஞ்சநேயர் கோயில் தெருவின் கடைசியில் ஒரு வாடகை வீட்டில் இருந்தோம். இந்த வாடகை வீட்டில் எத்தனை ஆண்டுகள் இருந்தோம் என்றால் 4, 5 ஆண்டுகள் வாடகைக்கு இருந்தோம். குறிப்பகாக எந்த வருடத்திலிருந்து, எந்த வருடம்வரை வாடகைக்கு இருந்தோம் என்று சொல்லமுடியுமா என்றால் மறந்துபோய்விட்டது, தெரியவில்லை.

7. எனது மாமியார் ஏதேனும் தானசெட்டில்மெண்ட் ஏதேனும் எழுதிவைத்துள்ளாரா என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால்

எழுதியும்வைக்கவில்லை, தெரியவும்தெரியாது. எனது மாமியார்தான் முதலில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கடைக்குண்டான வரி எனது மச்சான் சுரேஷ்கண்ணன், பெயரில்தான் செலுத்தப்படுகிறது என்றால் எனக்கு தெரியாது.

8. ஆஞ்சநேயர் கோயில் தெருவில் உள்ள வீட்டிற்கும், என் மச்சான் பெயரில்தான் வரி செலுத்தப்படுகிறது என்றால் எனக்கு தெரியாது. சொத்துக்களை எனது மனைவியும், எனது மச்சானும் கூட்டாக அனுபவித்துவந்ததாக நான் சொல்லும்நிலையில் அதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது மாமனார் 2004 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உயிலை 2009 ம் ஆண்டு ரத்து செய்துவிட்டு, எனது மச்சான் பெயரில் உயில் எழுதிவைத்துள்ளார் என்றாலும் இதையெல்லாம் தெரிந்துகொண்டு, எனது மனைவிக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

முடிவு நேரம் 1.35 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.